செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 21.05. 2021

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100): ஏப்றல் 2021**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2021 ஏப்றல் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம்(பதில்), தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 5.5% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2021 மார்ச் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 5.1% ஆக இருந்தது. 2021 ஏப்றல் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 4.3%, 1.2% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 5.9% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2020 ஏப்றல் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புக்கள் முறையே 5.2%, 0.7% ஆக காணப்பட்டன. 2020 ஏப்றல் மாதத்துடன் ஒப்பிடுகையில், உணவுப் பிரிவில் அதிகரித்த சதவீதம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், 2021 ஏப்றல் மாதத்தில் நிலவிய உயர்வான விலை மட்டங்களே குறிப்பாக மரக்கறி, அரிசி, தேங்காய், மஞ்சள்தூள், தேங்காய் எண்ணெய் மற்றும் மைசூர் பருப்பு ஆகியவற்றின் அதிகரித்த விலைகளாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2021 மார்ச் மாதத்தில் பதிவாகிய 142.1 இருந்து 2021 ஏப்றல் மாதத்தில் 142.2 வரை அதிகரித்துள்ளது. இது, 2021 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், 0.1 சுட்டெண் புள்ளி அல்லது 0.1 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.02% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.06% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புகள் தேங்காய் எண்ணெய், புதிய மீன், புதிய பழங்கள், கோழி இறைச்சி, அரிசி, பாசிப்பயறு, கருவாடு, மைசூர் பருப்பு, கொம்புப்பயறு, சீனி, கடலை மற்றும் மிளகாய்த்தூள் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், சுட்டெண் பெறுமதிகளில் விலை குறைவுகள் தேங்காய், மரக்கறி, பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு, முட்டை, புளியம்பழம், மஞ்சள்தூள் மற்றும் எலுமிச்சம்பழம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்றல் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம், 'ஆடையும் காலணியும்', 'தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு', 'போக்குவரத்து'(உராய்வுநீக்கும் எண்ணெய்) மற்றும் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். மேலும், 'அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்' பிரிவிலும் சற்று விலை அதிகரிப்பு பதிவாகியது. அதேநேரம், 'வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்', 'சுகாதாரம்', 'தொடர்பாடல்', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்', 'கல்வி' மற்றும் 'உணவகங்களும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2021 ஏப்றல் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2021 மார்ச் மாதத்தில் பதிவாகிய 4.3% இருந்து 4.1% வரை குறைவடைந்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) |
| **2020** | ஏப்ரல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 |
| | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 |
| | யூலை | 137.3 | 139.4 | 0.0 | 0.4 | 6.1 | 4.5 |
| | ஒகஸ்ட் | 137.8 | 139.9 | 0.4 | 0.4 | 6.2 | 4.6 |
| | செப்ரெம்பர் | 138.9 | 140.4 | 0.8 | 0.4 | 6.4 | 4.8 |
| | ஒக்ரோபர் | 139.1 | 140.5 | 0.1 | 0.1 | 5.5 | 4.5 |
| | நவம்பர் | 139.8 | 140.6 | 0.5 | 0.1 | 5.2 | 4.5 |
| | டிசம்பர் | 141.2 | 140.5 | 1.0 | -0.1 | 4.6 | 4.7 |
| **2021** | ஜனவரி | 142.1 | 141.0 | 0.6 | 0.4 | 3.7 | 4.2 |
| | பெப்ரவரி | 142.8 | 141.3 | 0.5 | 0.2 | 4.2 | 4.1 |
| | மார்ச் | 142.1 | 141.8 | -0.5 | 0.4 | 5.1 | 4.3 |
| | ஏப்ரல் | 142.2 | 142.5 | 0.1 | 0.5 | 5.5 | 4.1 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்